Nestlé Good food, Good life

# பத்திரிகைச் செய்தி

கொழும்பு, 11 ஒக்டோபர் 2022

## 47 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு நெஸ்லே *நெஸ்டமோல்ற்று* வலுவூட்டுகிறது

47 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த வார இறுதியில் (ஒக்டோபர் 8 மற்றும் 9) கம்பஹாவில் ஆரம்பமாகின. மரதன், நடையோட்டம் மற்றும் சைக்கிளோட்ட பந்தயங்களில் நாடு முழுவதிலும் இருந்து 1,500 க்கும் மேற்பட்ட திறமையான விளையாட்டு வீரர்கள் பங்குபற்றினர். இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சு மற்றும் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முதன்மை வர்த்தகநாமமான நெஸ்லே *நெஸ்டமோல்ற்று* இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வானது, இலங்கையின் இளம் திறமைசாலிகளை வளர்த்துக்கொள்ளவும், அவர்களின் திறமைகளை வெளிக்கொணரவும், வெற்றியாளர்களுக்கு தேசிய மட்டத்திலான அணிக்கு பரிசீலிக்கப்படும் வாய்ப்புக்கும் மிகவும் அவசியமான ஒரு களமாக அமைந்தது.

"ஒரு உண்மையான இலங்கை வர்த்தகநாமமாக, தேசிய மரதன் போன்ற நிகழ்வுகளுக்கு எமது ஆதரவின் மூலம் இலங்கையின் திறமையான விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவதில் பெருமை கொள்கிறோம். அவர்கள் தமது திறமைகளை முழுமையாக வெளிக்கொண்டு வருவதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் இதேபோன்ற நிகழ்வுகளில் அங்கம் வகிப்பதன் மூலம், தலைமுறை தலைமுறையாக சமூகங்கள் மத்தியில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான எங்கள் பயணத்தை நாங்கள் தொடர்ந்து முன்னெடுப்போம்," என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களுக்கான துணைத் தலைமை அதிகாரியான திரு. ருவான் வெலிகல அவர்கள் கருத்து தெரிவித்தார்.

35 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையின் மிகப்பெரிய மரதன் ஓட்டப் போட்டிகளின் ஒரு அங்கமாகத் திகழ்ந்து வரும் நெஸ்லே *நெஸ்டமோல்ற்று*, கடந்த ஆண்டு தேசிய மரதன் சாம்பியன் போட்டிகளுக்கு அனுசரணைகளை வழங்கியதன் மூலம் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கான தனது முயற்சிகளை மேலும் மேம்படுத்தியது. எதிர்வரவிருக்கும் போட்டிகளுக்கு அவர்கள் 100% தயாராக இருக்க அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற இலட்சியத்துடன் தொடங்கப்பட்ட இந்த அனுசரணையில் நிதி உதவி, தடகள பயிற்சி கருவிகள் மற்றும் ஒரு வருடத்திற்கான நெஸ்லே *நெஸ்டமோல்ற்று* தயாரிப்பு ஆகியவை அடங்கும்.

ஒக்டோபர் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் இடம்பெற்ற 6 போட்டி நிகழ்வுகளின் முடிவுகள் வருமாறு:
மரதன் - ஆண்கள் - (1) ரி.எம். ரத்னபால (2) ஆர்.ஏ.பீ.டி. அருணசிறி (3) டபிள்யூ.எம்.எஸ். குமார
மரதன் - பெண்கள் - (1) எம்.எஸ்.பீ.எம். பெரேரா (2) எச்.எம்.டபிள்யூ.ஜி.டபிள்யூ.எம். ஹேரத் (3) ஏ.எல்.எஸ்.டி. லியனகே
நடையோட்டம் - ஆண்கள் - (1) ஆர்.எம்.டி. ருக்மால் (2) எச்.எம்.எஸ்.ஆர். ஹேரத் (3) பீ.எச்.எஸ். லக்மால்
நடையோட்டம் - பெண்கள் - (1) யு.வி.கே. மதுனிகா (2) ரி.எச்.டி. டில்ஹானி (3) பீ.பி. கயானி
சைக்கிளோட்டம் - ஆண்கள் - (1) எச்.ஏ.டி. மடோன்ஸா (2) ஆர்.ரி.சி. தயானந்த (3) டி.எஸ். நுகேரா
சைக்கிளோட்டம் - பெண்கள் - (1) கே.ஏ.எஸ்.என். பெரேரா (2) டபிள்யூ.ஏ. அக்ஷா சந்தமினி (3) வி.என். குமாரசிங்க

அகில இலங்கை பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் 2022 நிகழ்வின் ஒரு பகுதியாக அகில இலங்கை பாடசாலைகளுக்கான மினி மரதன் போட்டியும் அதே நாளில் இடம்பெற்றது. கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வானது வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களின் முன்னேற்றத்திற்கு வலுவூட்டி, அவர்களின் விளையாட்டு வாழ்வில் சாதகமான தொடக்கத்தை அளிக்கும் அதன் பயணத்தின் அங்கமாக நெஸ்லே நெஸ்டமோல்ற்றினால் அனுசரணை வழங்கப்பட்டது.

போட்டி முடிவுகள்:
21 கிலோ மீட்டர் மினி மரதன் (ஆண்) - (1) எம். சதீஷ அனுசங்க (2) எஸ். கீரன் (3) ஏ.கே.டி. டில்ஹார லக்ஷான்
21 கிலோ மீட்டர் மினி மரதன் (பெண்) - (1) டபிள்யூ.ரி.பீ. மதுவந்தி (2) ஜி.டபிள்யூ.ஓ. நிலுமிகா (3) டி.எம்.சி. சிரிவர்த்தன
5 கிலோ மீட்டர் ஓட்டம் (ஆண்) - (1) கே.கே.எல். நிர்மான் (2) கே.வி.பீ. ஹர்ஷன (3) பி.எல்.கே. திலாஷ்
5 கிலோ மீட்டர் ஓட்டம் (பெண்) - (1) டபிள்யூ.எம்.பி. அமாஷ் (2) ஏ.பீ.டி.ரி.டி குமாரி (3) ஓ.எம்.டி பிரியங்கா

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாகத் திகழ்ந்து வருகிறது. நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற அதன் தயாரிப்புக்களில் 90% இற்கும் மேற்பட்டவை குருணாகலிலுள்ள அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. நிறுவனத்தின் முதன்மையான வர்த்தகநாமமான, *நெஸ்டமோல்ற்று* 60 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் குடும்பங்களின் நம்பிக்கையை வென்று, அவர்களால் சுவைத்து மகிழப்பட்டு வருகின்றது. பிரத்தியேகமாக இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்பட்டு, நாட்டின் மிகவும் அபிமானம் பெற்ற மோல்ற்று அடங்கிய பானம் என்ற தனித்துவமான நாமத்துடன், மோல்ற்று அடங்கிய பார்லி மற்றும் பாலின் நலச்செழுமைகளை வழங்கி வருகிறது, உடலையும் மனதையும் உற்சாகப்படுத்த தேவையான ஊட்டச்சத்துக்களால் இது செறிவூட்டப்பட்டுள்ளது.

---

**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுரி அழககோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |